# தமிழ் வருடாந்திர மாநாடு மெதடிஸ்ட் பெண்கள்
## உபவாச ஜெப நாள் (13 ஜனவரி 2019)

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே,

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்.
இந்த 2019–ஆம் ஆண்டை வரவேற்கும் தருணத்தில் நாம் யாவரும் இணைந்து நமது மாநாட்டுக்காகவும், நமது பெண்களுக்காகவும், நமது நாட்டிற்காகவும் திறப்பிலே நின்று ஜெபிக்கும் கடமையை நிறைவேற்றுவோம்.
மெதடிஸ்ட் பெண்களாக இணைந்து கீழ்கண்ட காரியங்களுக்காக உபவாசித்து ஜெபிப்போம்.

**அ. குடும்பம்**

1. குடும்பங்களில் தேவனுடைய பிரசன்னமும் பரிசுத்தமும் காணப்பட ஜெபியுங்கள்.
2. குடும்பங்களில் தேவனுடைய ஆளுகையும் வழிநடத்துதலும் நிரம்பி இருக்க ஜெபியுங்கள்.
3. குடும்பங்கள் தேவனுடைய சித்தத்தை செய்ய ஒப்புக்கொடுத்து ஜெபிக்க ஜெபியுங்கள்.
4. குடும்பங்களில் தேவனுடைய அன்பும் பாதுகாப்பும் காணப்பட ஜெபியுங்கள்.
5. குடும்பங்களில் ஒருமனம், அன்பு மற்றும் கணவன் மனைவியிடையிலான புரிந்துணர்வு தேவனால் கட்டப்பட ஜெபியுங்கள்.
6. பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்படியவும் பெற்றோர்களுடன் நல்ல உறவோடு இருக்கவும் ஜெபியுங்கள்.

**ஆ. திருச்சபை**

1. திருச்சபைகள் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஊழியத்தில் தேவ சித்தத்தை தேடவும் முழுமனதுடன் தேவனுக்கு பயப்படவும் ஜெபியுங்கள்.
2. ஒருமனத்தின் ஆவி ஒவ்வொரு திருச்சபையிலும் காணப்பட ஜெபியுங்கள்.
3. ஒவ்வொரு விசுவாசிகளும் உண்மையுள்ள சீஷர்களாய் தேவனை நன்றாய் அறிந்து ஊழியம் செய்ய ஜெபியுங்கள்.
4. விசுவாசிகளாகிய நாம் யாவரும் உறுதியான விசுவாசத்திலும் தேவனுடைய வார்த்தையிலும் ஜெபத்திலும் வளர ஜெபியுங்கள்.
5. சபைகளில் தேவன் தலைவராக இருக்கவும் விசுவாசிகளாகிய நாம் தேவனை மாத்திரம் மகிமைப்படுத்தவும் ஜெபியுங்கள்.

**இ. மெதடிஸ்ட் பெண்கள்**

1. மாநாட்டு மெதடிஸ்ட் பெண்கள் செயற்குழு உறுப்பினர்கள், 7 மாகாண செயற்குழு உறுப்பினர்கள், எல்லா 54 ஸ்தல திருச்சபையின் மெதடிஸ்ட் பெண்கள் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் வெளிப்புற ஊழியத்தின் மெதடிஸ்ட் பெண்கள் செயற்குழு உறுப்பினர்கள் தேவனுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் கீழ்படிந்து ஊழியத்தில் அன்போடும் வாஞ்சையோடு செயல்பட ஜெபியுங்கள்.
2. ஸ்தல திருச்சபை மாகாணம் மற்றும் மாநாட்டு அளவிலான நடக்கவிருக்கும் 2019–ஆம் ஆண்டிற்கான எல்லா நிகழ்ச்சிகளுக்காக ஜெபியுங்கள்.
3. நமது பெண்கள் உறுதியான கிறிஸ்துவ குடும்பங்களை உருவாக்கவும் தேவனுக்கு சாட்சியாகவும் இருக்கவும் ஜெபியுங்கள்.

**ஈ. மாநாடு**

1. த. வ. மா தலைவர், எல்லா மாகாண கண்காணிப்பாளர்கள், போதகர்கள் மற்றும் தலைவர்கள் யாவரையும் தேவன் ஞானத்தோடும் உண்மையோடும் தாழ்மையோடும் கர்த்தரை சார்ந்திருக்கவும் வழிநடத்தவும் ஜெபியுங்கள்.
2. தேவ சித்தத்தின்படி திருச்சபை ஊழியங்களின் வளர்ச்சி மற்றும் திருச்சபை விசுவாசிகளின் ஆவிக்குறிய வளர்ச்சி பெருக ஜெபியுங்கள்.
3. போதகர்கள் ஜெப வீரர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் மிஷனரிகளின் எண்ணிக்கை அதிகரிக்க ஜெபியுங்கள்.

**உ. தேசம்**

1. நீதியுள்ள, சமத்துவமுள்ள, சுதந்திரமிக்க, சிறப்பான, மற்றும் பல இன மத கலாச்சார பிண்ணனியில் இணக்கமான ஒரு புதிய அரசாங்கத்துடன் கூடிய ஒரு புதிய மலேசியாவிற்காக ஜெபியுங்கள்.
2. நமது பிரதம மந்திரி மற்றும் அனைத்து மந்திரிகளுக்காக ஜெபியுங்கள்.
3. பல்வேறு இனங்கள் மத்தியில் புரிதல், அமைதி, மற்றம் ஒற்றுமை காணப்பட ஜெபியுங்கள்.
4. மதம், கல்வி, வேலை, வியாபாரம் சார்ந்த காரியங்களில் சம உரிமையும் முடிவெடுக்கும் சுதந்திரமும் வழங்கப்பட ஜெபியுங்கள்.
5. தேசத்தில் தேவனுடைய சித்தம் நிறைவேறவும் அவருடைய இராஜ்ஜியம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.
6. தேசத்தில் நற்செய்தியும் இரட்சிப்பும் பரவ ஜெபியுங்கள்.

**அவர் பணியில்,**

**திருமதி வின்சலா ஜேசுதாஸ்**
**ஆவிக்குரிய ஜீவிய ஒருங்கிணைப்பாளர்.**